# வணக்கம்

எப்போதும் யாருடனாவது உரையாடிக் கொண்டிருப்பதில் எனக்கு சிறு வயது முதலே விருப்பம் அதிகம். ஓயாமல் பேசிக்கொண்டிருப்பவனாகவே நான் என் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அறியப்பட்டிருக்கிறேன். தனிமையும் மௌனமும் எனக்கும் பிடித்தவைதான் என்ற போதும் அப்படிப்பட்ட தருணங்கள் என் வாழ்க்கையில் குறைவாகவே வாய்த்திருக்கின்றன. எனக்கு சிலை வைத்தால், ஒரு பெரிய வாயின் உருவமும், அதன் கீழே அறுந்து விழுந்து கிடக்கிற பல காதுகளையும் தான் சிலையாக வடிவமைக்க வேண்டும் என்பது நண்பன் வைத்தியின் பிரபலமான கிண்டல். ஆனால் ஒரு நல்ல பேட்டியாளனுக்கு பேசுகிற வாய்க்கு சமமாகக் கேட்கிற காதும் முக்கியமானது.

சக மனிதர்களுடன் உரையாடுவதில் எனக்குள்ள சுவாரஸ்யமும், நீண்ட காலப் பழக்கமும் பத்திரிகைத் துறையில் நான் பலரையும் பேட்டி காண உதவியிருக்கின்றன. 1982 முதல் 2003 வரையில் அப்படி நான் எடுத்த சில பேட்டிகளின் தொகுப்பே இந்த நூல்.

இதில் நான் ஆங்கிலப் பத்திரிகையாளனாக எடுத்த பேட்டிகளும், பத்திரிகைத் துறையில் என் முதல் பத்தாண்டுகளின் அன்றாட நிருபர் வேலையில் பிரதமர்கள், முதலமைச்சர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், கலைஞர்கள், பொதுமக்கள் என்று பலரையும் சந்தித்து எடுத்த சின்னஞ்சிறு பேட்டிகளும், தொலைக்காட்சிக்காக பல்வேறு துறையினருடன் எடுத்த வீடியோ பேட்டிகளும் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. காஞ்சி சங்கர மடத்தலைவர் ஜயேந்திரரை சந்திக்க 1983இல் சின்னக் குத்தூசியுடன் சென்றபோது நடத்திய உரையாடல், அதைத் தொடர்ந்து சோவுடன் எழுந்த சர்ச்சைகள் முதலியன தனி நூல் வடிவில் ஏற்கனவே திராவிடர் கழகத்தாலும், திருச்சி தோழர் அரசெழிலன், அமராவதி தோழர் சீனி. மோகன் ஆகியோராலும் வெளியிடப்பட்டிருப்பதால், அவையும் இந்நூலில் சேர்க்கப்படவில்லை.

இவற்றை நேர்காணல் என்று குறிப்பிடாமல் கேள்விகள் : ஞாநி என்று தலைப்பிட்டிருக்கக் காரணம், தினமணி பொங்கல் மலரில் வெளியான கலைஞர் கருணாநிதி பேட்டியும் சுபமங்களாவில் வெளியான அசோகமித்திரன் பேட்டியும் நேர்காணாமல், கேள்விகள்

மட்டுமே அனுப்பி வைத்து பதில்களை எழுத்துப்பூர்வமாக பெற்றதேயாகும். மற்றவை அனைத்தும் நேர்காணல்களே.

ஒவ்வொரு நேர்காணலும் எனக்கு நிறைவும் பயனும் அளித்தவை. அவற்றை இப்போது தொகுத்திருப்பது வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பிரமுகர்கள் எப்படிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் என்பதை அந்தந்த காலத்தோடு இன்று மனதில் பொருத்திப் பார்த்து வாசிப்பது ஒரு பயனுள்ள வாசக அனுபவமாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான். ஒரு பேட்டியில் பதில் சொல்பவரின் பார்வையை முழுமையாக வெளிப்படுத்தும் விதத்திலேயே கேள்வி கேட்பவர் இயங்க வேண்டும் என்ற என் கோட்பாட்டின் அடிப்படையிலேயே நான் செயல்பட்டிருக்கிறேன். அதேசமயம் என்னுடைய படைப்புகளிலும் நான் அளித்த பேட்டிகளிலும் நான் தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் என் சமூகப் பார்வையை இவற்றின் ஊடாகவும் காணலாம்.

இந்தப் பகிர்தல் வாசகர்களுக்கு நிறைவைத் தரவேண்டும் என்று விரும்புகிறேன். இந்தப் பணியில் எனக்கு உதவி நண்பர்கள் வந்தியத்தேவன், பாலமுருகன், என் முயற்சிகளுக்கு எப்போதும் வலுசேர்த்துவரும் நண்பர்கள் ஏ.எஸ். பத்மாவதி, (மா) மனுஷ் நந்தன் ஆகியோருக்கும், இந்த பேட்டிகளை முன்னர் வெளயிட்ட பத்திரிகைகளுக்கும் என் நன்றி.

**சென்னை-41**



**முதல்பதிப்பின் முன்னுரையில் இருந்து**